# உரக்கப் படிப்பதன் இன்பங்கள்

குழந்தைகள் மிக இளையவர்களாக இருக்கும்பொழுது தொடங்கி, அவர்கள் தாமே படிக்கும் வயதை அடையும் வரை, அவர்களுக்காகப் புத்தகங்களை நீங்கள் உரக்கப் படித்துக் காண்பிப்பது சிறந்த பலன்களைத் தரும். இவ்வாறான நேரம் நெருக்கத்தையும், ஓய்வையும் சுவைப்பதற்காகவும் ஆர்வத்தைப் பகிர்ந்து கொள்ளவும் மற்றும் உலகத்தை ஆராயவும் ஆகும். மேலும், குழந்தைகளுக்கு நாளொன்றுக்கு 20 நிமிடங்கள் புத்தகம் படித்துக் காண்பித்தால், அது அவர்கள் பின்னாளில் பள்ளியில் வெற்றி பெறுவதற்குரிய வாய்ப்புக்களை மேம்படுத்தும் என்று வல்லுநர்கள் கூறுகின்றனர்.

அவ்வாறு நீங்கள் படிக்கும் நேரத்தைச் சிறப்பாகச் செய்வதற்கு இங்கே சில வழிகள் தரப்பட்டுள்ளன.

**தொடக்க நிலை**
நீங்கள் கொண்டுள்ள அக்கறை மற்றும் ஆர்வத்தை உங்களது வெளிப்புற உடல் நிலை உணர்த்தும். நீண்ட இருக்கையில் அல்லது படுக்கையில் சாய்ந்தோ அல்லது தரையிலேயே அமர்ந்தபடியோ குழந்தையின் முகமட்டத்தில் உங்கள் முகம் இருக்குமாறு பார்த்துக்கொள்ளுங்கள்.

**வயதுக்கு ஏற்றாற்போல் புத்தகத்தைத் தேர்ந்தெடுங்கள்**
குழந்தைகள் சுவை உட்பட அனைத்துப் புலன்களாலும் புத்தகங்களை ஆராய்வர் என்பதால், அவர்களால் எளிதில் கிழிக்க இயலாத கனத்த அட்டை, அல்லது துணியால் ஆன புத்தகங்களைத் தேர்வு செய்யுங்கள். பின்னர், பச்சிளம் குழந்தைகள் ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு படம் உள்ள புத்தகத்தில் பொருட்களுக்குப் பெயரிட விரும்புவர். படிப்படியாகக் குழந்தைகள் புத்தகத்திலுள்ள கதைகளில், முதலில் மிக எளிய கதைகள், பின்னர் சிறிது நீளமான கதைகள், அப்புறம் மிகுந்த சிக்கல்கள் நிறைந்த கதைகள் எனும் வரிசையில் ஆர்வம் காட்டுவர். காலப்போக்கில், நீங்கள் நீளமான கதை உள்ள புத்தகங்களை ஒரு நேரத்தில் ஒரு அத்தியாயம் என்ற முறையில் படித்து சில நாட்களில் அல்லது வாரங்களில் படித்து முடிக்கலாம்.

**குழந்தைகளின் ஆர்வத்திற்கேற்ப**
குழந்தையின் வயதுக்கும், ஆர்வத்துக்கும் பொருந்தும் புத்தகத்தைத் தேர்வு செய்யுங்கள். நீங்கள் புத்தகத்தின் கடைசிப் பக்கம் வருவதற்குள் இளம் குழந்தைகள் தங்கள் ஆர்வத்தை இழந்துவிடலாம். அது இயல்புதான். இச்செயலின் நோக்கம் புத்தகம் படிப்பதை இனிமையாக்குவதே தவிர, புத்தகத்தைப் படித்து முடிப்பதன்று.

**புத்தக வரிகளை ஏற்றவாறு மாற்றிக்கொள்ளுங்கள்**
நீங்கள் படித்துக் காட்டும் குழந்தையின் வயதுக்கேற்ப, புத்தகத்தின் உள்ளடக்கத்தை நீங்கள் மாற்றிக்கொள்ளலாம். இளம் குழந்தைகளுக்குப் புத்தகத்தில் உள்ள படங்களை மட்டும் விளக்கிச் சொல்ல முயலுங்கள் அல்லது புத்தகத்தில் உள்ள கதையை உங்கள் சொந்தச் சொற்களில் சொல்லிப் பாருங்கள். கதையில் வரும் பாத்திரங்களின் பெயர்களையும் குழந்தைக்குத் தெரிந்தவர்களின் பெயர்களாக மாற்றிக்கொள்ளலாம்.

**குழந்தைகளின் கவனத்தை ஈருங்கள்**
பிரகாசமான வண்ணங்கள் மற்றும் தெளிவான விளக்கப் படங்கள் குழந்தைகளின் ஆர்வத்தை ஈர்க்கும். மடித்துவிட்ட பகுதிகள் நிமிரும்படி, கதை நிகழ்ச்சிகள் திடீரெனக் குதித்து வருவது போல், ஏற்படுத்தி வைத்திருக்கும் சிறு வெடிப்புக்களில் சிறு துண்டுகள் பொருந்தும்படி—என அசையும் பாகங்களைக் கொண்ட புத்தகங்கள் ஆர்வமின்றி நெளியும் குழந்தைகளின் கவனத்தைப் பிடித்துவைத்துக்கொள்ளும். அவர்கள் மிக விரும்பும் செயற்பாடு, அவர்களுக்குப் பிடித்த விலங்கு ஒன்று போன்றவற்றைக் கதையோடு இணைத்து நீங்கள் அவர்களின் ஆர்வத்தை நிலைப்படுத்தலாம்.

**நீங்கள் படிப்பதை நாடகம் போலச் செய்யுங்கள்**
நீங்கள் படிப்பதை ஒரு நாடகம் போலச் செய்வதும் குழந்தைகளைக் கதையில் கவனம் செலுத்துமாறு செய்யும். குழந்தைப் பாடல்களில் உள்ள தாளகதியை வலியுறுத்துங்கள். நீங்கள் எதைப்பற்றிப் பேசுகிறீர்கள் என்பதைப் புத்தகத்தில் உள்ள படங்களைச் சுட்டிக் காட்டியும், சைகைகள் செய்தும் உணர்த்துங்கள். கதையில் வரும் வெவ்வேறு பாத்திரங்களுக்கு ஏற்ப உங்கள் குரலையும் வெவ்வேறாக மாற்றிக்கொள்ளுங்கள். விலங்குகள் பற்றி வரும்போது அவ்விலங்கு போலவே ஒலி எழுப்புங்கள். குழந்தைகளை நீங்கள் செய்வது போலவே செய்யச் சொல்லி மகிழ்ச்சியில் அவர்களும் இணையுமாறு ஊக்கப்படுத்துங்கள்.

**குழந்தைகளை ஈடுபடுத்துங்கள்**
குழந்தைகள் பல முறை கேட்ட கதையை நீங்கள் மீண்டும் படித்துக் காண்பிக்கும்பொழுது, இடைவெளி விட்டு, கதையின் அடுத்த கட்டத்தைக் குழந்தைகளே சொல்லுமாறு செய்து படிப்பதில் அவர்களையும் ஈடுபடுத்தலாம். சில கதைகளில் சில சொற்களைத் திரும்பத் திரும்பச் சொல்லும் வாய்ப்பு இருப்பதால், அவ்வாறு நீங்கள் திருப்பிச் சொல்லும்போது குழந்தைகளையும் உங்களோடு சேர்ந்து சொல்லச் செய்வது எளிதாகிறது. புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டும் வேலையைக் குழந்தையிடம் ஒப்படைப்பது, அவன் அல்லது அவளைப் படிப்பதில் ஈடுபடச் செய்யும்.

**கேள்விகள் கேளுங்கள்**
படிக்கும்பொழுது இடையிடையே நிறுத்திவிட்டுக் கதை பற்றி அல்லது அப்பக்கத்தில் உள்ள படம் பற்றிக் கேள்விகள் கேளுங்கள். குழந்தை பேசத் தொடங்குவதற்கு முன்பே நீங்கள் "நரி எங்கே ஒளிந்திருக்கிறது என்பதை நீ பார்க்க முடிகிறதா?" என்று கேட்கலாம். எண்ணுவதற்குக் கற்றுக்கொண்டிருக்கும் குழந்தையிடம் "இந்தப் பக்கத்தில் எத்தனை பூனைகள் உள்ளன?" என்று கேட்கலாம். "கதையில் வரும் சிறுமி அந்தக் கதவைத் திறந்தால் என்ன நிகழும் என்று நீ நினைக்கிறாய்?" என்று கேட்டு, மூத்த குழந்தைகளைப் படிப்பில் ஆழ்த்தலாம்.

**கேள்விகளுக்கு விடை அளியுங்கள்**
நீங்கள் குழந்தைகள் கேட்கும் கேள்விகளுக்கும் விடை அளிக்க நேரம் செலவழியுங்கள். இன்னும் சரியாகப் பேசப் பழகாத குழந்தையைப் பொறுத்தவரை, அது ஒரு படத்தைச் சுட்டிக் காட்டுவதே கூட அதன் கேள்வியாக இருக்கலாம். அக்குழந்தை சுட்டும் படத்தில் என்ன இருக்கிறது என்பதை விவரித்து அக்குழந்தையின் சந்தேகத்தை நீக்குங்கள். மூத்த குழந்தைகள் "ஏன் ஒரு கதாப்பாத்திரம் குறிப்பிட்ட செயல் ஒன்றைச் செய்தது?" என்பது போன்ற கேள்விகளைக் கேட்கலாம். படிப்பதை இடைநிறுத்திவிட்டு அவர்களின் கருத்தைக் குறித்து விவாதியுங்கள்.

**மீண்டும் மீண்டும்**
மாற்றத்தை விரும்பும் பெரியவர்கள் மனம் தளரும் வண்ணம், சில நேரம், குழந்தைகள் ஒரே குறிப்பிட்ட புத்தகத்தை மீண்டும் மீண்டும் படிப்பதை விரும்பி, அதையே படிக்கச் சொல்லி வற்புறுத்துவர். இம்மாதிரி, பழக்கமான புத்தகத்தை மிகுதியாக விரும்பும் குழந்தைகளின் இயல்பைப் பொறுத்துக்கொள்ளுங்கள். புத்தகத்தில் உள்ள கதை, கருத்துக்கள், சொற்கள் இவற்றைக் குழந்தைகள் கற்றுக்கொள்வதற்கு மீண்டும் மிண்டும் படிப்பது ஒரு வழியாகும்.

**படிப்பதைத் தொடருங்கள்**
உங்கள் குழந்தைகள் தாமே படிக்கும் ஆற்றல் பெற்ற பிறகும், நீங்கள் குழந்தைக்கும், குழந்தை உங்களுக்கும் என ஒவ்வொரு நேரம் ஒவ்வொருவர் படிக்கலாம். இவ்வாறு புத்தகம் படிப்பதில் பெற்ற நல்ல உணர்வுகளைப் பகிர்ந்துகொண்ட இன்பமான பொழுதுகள், நீண்ட காலம் நினைவில் நிலைத்து நிற்கும்.

*Betsy Mann*

L’Association canadienne des programmes de ressources pour la famille

# Les plaisirs de la lecture à haute voix

Il y a plein de raisons de regarder des livres et de les lire à haute voix aux enfants, à partir d’un très jeune âge et continuant bien après qu’ils peuvent lire eux-mêmes. C’est l’occasion de passer ensemble des moments de détente et d’intimité, de partager des intérêts et d’explorer le monde. En outre, les experts suggèrent que lire aux enfants 20 minutes par jour contribue grandement à leur succès scolaire.

Voici quelques suggestions pour tirer profit de votre temps de lecture.

## La position du départ

Votre position physique communique votre intérêt et votre affection. Placez-vous à la hauteur de l’enfant, câlinant ensemble sur le sofa ou le lit ou assis par terre.

## Choisir le livre selon l’âge

Les bébés explorent les livres à travers tous les sens, incluant le goût, alors choisissez les livres cartonnés ou en tissu qui résisteront à cet usage. Plus tard, les tout-petits s’intéressent à nommer les choses dans les livres qui ont une image par page. Les enfants apprennent graduellement à écouter les histoires dans les livres. D’abord ils aiment les histoires très simples; ensuite, peu à peu, ils prennent goût à des histoires plus complexes et longues. Éventuellement, vous pourrez lire de plus longs livres, étalés sur des jours ou même des semaines, un chapitre à la fois.

## Suivre leurs intérêts

Choisissez un livre selon l’âge et les intérêts des enfants. Les plus petits perdent souvent l’intérêt avant d’arriver à la dernière page. C’est normal. Le but est de prendre plaisir à la lecture, pas nécessairement de finir le livre.

## Adapter le texte

Vous pouvez adapter le texte à l’âge des enfants auxquels vous lisez. Pour les très jeunes, décrivez simplement les images ou contez l’histoire dans vos propres mots. Vous pourriez même changer les noms des personnages en substituant les noms des personnes connues par les enfants.

## Attirer leur attention

Les enfants sont attirés par les couleurs vives et les illustrations claires. Vous pouvez intéresser un enfant qui bouge beaucoup en lui offrant des livres qui bougent aussi : des rabats qu’on lève, des scènes en trois dimensions, des morceaux que l’on glisse dans des fentes. Partez de ce qui l’intéresse déjà : une activité qu’il aime, un animal préféré.

## Rendez votre lecture dramatique

Vous pouvez aussi maintenir l’intérêt en rendant votre lecture dramatique. Mettez l’emphase sur le rythme dans les comptines. Utilisez des gestes et pointez du doigt les images dont vous parlez. Changez votre voix selon les différents personnages et faites les sons des animaux. Encouragez les enfants à partager le plaisir en vous imitant.

## Impliquez les enfants

Quand les enfants ont déjà entendu une histoire à plusieurs reprises, vous pouvez solliciter leur participation. Faites un petit arrêt pour leur permettre de dire les prochains mots. Certaines histoires ont un refrain qui facilite cette astuce, par exemple les paroles du loup qui menace de souffler sur les maisons dans « Les trois petits cochons ». Même laisser l’enfant tourner la page peut suffire pour le faire participer.

## Poser des questions

De temps en temps, arrêtez pour poser une question au sujet des illustrations ou de l’histoire. Même avant qu’un enfant puisse parler, vous pouvez demander « Vois-tu où se cache le loup? ». Si un enfant apprend à compter, demandez « Combien de chats vois-tu dans l’image? ». Encouragez la réflexion chez les plus grands en demandant « Que penses-tu va arriver si Boucle d’or mange le gruau? ».

## Répondre aux questions

Prenez le temps de répondre aux questions des enfants aussi. Chez les enfants qui n’ont pas encore beaucoup de mots, le fait de pointer une partie de l’illustration peut être une question. Répondez à son intérêt en nommant ce que pointe l’enfant. Les plus âgés voudront peut-être savoir pourquoi un personnage a fait quelque chose. Faites une pause dans la lecture pour discuter de leurs idées.

## Encore et encore

Les enfants adorent entendre la même histoire encore et encore, au désespoir de plusieurs adultes qui préféreraient plus de variété. Soyez patient face à leur préférence pour ce qui est bien connu. La répétition permet à l’enfant de maîtriser les mots, les concepts et l’histoire contenus dans le livre.

## Maintenez l’habitude

Une fois que vos enfants sont capables de lire seuls, vous pouvez lire à haute voix, chacun son tour. Les sentiments agréables de ces moments de plaisir, passés à partager des livres, se prolongeront pendant des années.

*par Betsy Mann*

FRP Canada 707 - 331, rue Cooper, Ottawa ON K2P 0G5 1-866-637-7226 www.frp.ca